வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 80

செவ்வாய்க்கிழமை 14 பெப்ரவரி 2023 | மாசி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12



## பிரபாகரன் நலமாக உள்ளார் விரைவில் வெளிப்படுவார்

பழ.நெடுமாறன் திடீரென நேற்று பரபரப்பு தகவல்

சென்னை, பெப். 14
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், அவருடைய மனைவி, மகள் ஆகியோர் நலமுடன் இருப்பதாகவும் அவர்கள் உரிய

## பழ.நெடுமாறன் கூறியதை சாதாரணமாகக் கருதமுடியாது

என்கிறார் எம்.கே.சிவாஜிலிங்கம்

## பிரபாகரன் உயிருடன் இருந்தால் மகிழ்ச்சியே!!!

வை.கோ. தெரிவிப்பு

## சொல்லிவிட்டு வரமாட்டார் வந்தபின்னே சொல்லுவார்

சீமான் கருத்து

## போராட்டத்தில் குடும்பத்தையே அர்ப்பணித்தவர் பிரபாகரன்

பொன்சேகா புகழாரம்

## பிரபாகரன் கடவுளா?

இப்படிக் கேட்கிறார் கோத்தா

## டில்லியின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கிறாரா நெடுமாறன்?

தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் பலரும் கேள்வி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 14
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பதாக பழ.நெடுமாறன் திடீரென நேற்று வெளியிட்ட அறிவிப்புத் தொடர்பில் பல தரப்பினரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். அவரது நேற்றைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் இந்திய அரசின் - புது டில்லியின் நோக்கத்தை அடைவதற்கு உதவும் வகையில் உள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## பிரபாகரன் உயிரோடில்லை ஆதாரங்கள் எம்மிடம் உண்டு

இராணுவப்பேச்சாளர் தெரிவிப்பு

## பிரபாகரனின் குடும்பத்தில் எவருமே உயிருடன் இல்லை

பாதுகாப்பு அமைச்சின் செயலர் திட்டவட்டம்

## பிரபாகரன் இருக்கிறார்; ஆனால் நரகத்திலாம்!

சரத் வீரசேகர எகத்தாளம்

## நெடுமாறன் வதந்தி பரப்புகிறார்!

மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு

விரிவுகள்:- பக் - 11

## 4 தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுப் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, பெப். 14
ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்து 14 ஆண்டுகளாக சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் 4 பேருக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.
தமிழ் அரசியல் கைதியான கந்தையா இளங்கோ உள்ளிட்ட 4 பிரதிவாதி »10

நீண்டகால முன்பகை

## வாள்வெட்டில் ஒருவர் சாவு!

கிளிநொச்சி, பெப். 14
நீண்டகால முன்பகை வாய்த்தர்க்கமாக மாறி இறுதியில் வாள்வெட்டில் முடிந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 3பேர் »10

## ஆர்னோல்ட் மீதான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 14
யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயராக ஆர்னோல்ட் அறிவிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதனை »10

காதல் வலை வீசி

## 14 வயதுச் சிறுமிகளை வன்புணர்ந்த கும்பல்!

யாழ்ப்பாணம், பெப். 14
கிளிநொச்சி மற்றும் மன்னாரைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமிகளை காதலிப்பதாகக் கூறி ஏமாற்றி வன்புணர்ந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமிகள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ள »10

தேர்தலுக்கு தடங்கல்

## வாக்குச்சீட்டு விநியோகம்: நேற்றிரவு திடீர் நிறுத்தம்

இன்று அவசரமாகக் கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், பெப். 14
உள்ளூராட்சி தேர்தல் தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்களை இன்று முதல் ஒவ்வொரு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களும் அரசாங்க அச்சகத்தில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் நேற்று இரவு திடீரென அது இடைநிறுத்தப்பட்டுள்ளது. »10

## 'பிக்கானால்' தாக்கி பெண் படுகொலை

செய்வினைக்கான தடயங்களும் ரூ. 40 லட்சம் பணமும் மீட்பு

விரிவு:- பக் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. மருத்துவமனையில் மருத்துவப் பெருநெருக்கடி

## பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 14

வட்டுக்கோட்டை மருத்துவமனைக்கான நிதி ஒதுக்கீடுகளும், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஒதுக்கப்படுவதும் மிகவும் குறைவாக இருக்கின்றது. இதனால், இங்குள்ள மக்கள், நோயாளிகள் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் – இவ்வாறு தெரிவித்தார் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் ரதினி காந்தநேசன்.

வட்டுக்கோட்டை மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குழந்தைகளுக்கான பாணி மருந்துகள், நோயாளிகளுக்கான அத்தியாவசிய மருந்து வகைகள் எமது மருத்துவமனையில் இல்லை. நோயாளிகளை வெளியே மருந்துகள் எடுக்குமாறு கூறவும் எமக்கு மனம் வரவில்லை. ஏனென்றால் மக்கள் ஏற்கனவே கஷ்டத்தில் உள்ளார்கள். அவர்களை மேலும் கஷ்டத்துக்குள் தள்ளுவதற்கு மனமில்லாமல் இருக்கிறது.

அதைத்தவிர எங்களது நோயாளர் காவுவண்டி நன்றாக பாவனையில் இருந்தது. காரைநகர் மருத்துவமனையின் நோயாளர் காவு வண்டி பழுதடைந்ததன் காரணமாக அந்த நோயாளர் காவு வண்டியை எமது மருத்துவமனையில் விட்டுவிட்டு எங்களது நோயாளர் காவு வண்டியை அங்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

காரைநகர் வீதி சீரின்மை காரணமாக எமது மருத்துவமனை நோயாளர் காவுவண்டி பழுதடைந்த நிலையில் உள்ளது.

அதைத் திருத்துவதற்கும் போதிய நிதி இல்லை. இதனால் இந்த வண்டியைப் பாவிப்பது நோயாளிக்கும், சாரதிக்கும் ஆபத்தானது என்பதால் ஜனவரி மாத இறுதியில் இருந்து நோயாளர் காவுவண்டியைப் பாவிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது. வடமாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாரபட்சம் காணப்படுகிறது. வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் நிதியில் பெருமளவு நிதி வவுனியா மாவட்டத்துக்கு ஒதுக்கப்படுகிறது. கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடானது மிகவும் குறைவாக இருப்பதாகவே எனக்குத் தெரிகிறது. எமக்குக் கிடைக்கும் மருந்துகளின் அளவுகளும் குறைவாகக் காணப்படுகிறது. அந்த மருந்துகளை எடுத்து வருவதற்குக்கூட நோயாளர் காவுவண்டி இல்லாமல் உள்ளதால் எமக்கான மருந்துகள் வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் மருத்துவ சேவையைச் சரியாகச் செய்ய முடியாமல் உள்ளது. ஆகையால் இந்தத் தொழிலில் இருந்து விலக வேண்டும் என்ற நிலை தோன்றியுள்ளது.

எனவே, புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற உறவுகளும் நல்லுள்ளம் கொண்ட உறவுகளும் எமது மருத்துவமனையின் மருத்துவ சேவைகளுக்கு உதவிகளை வழங்க வேண்டும் - என்றார்.

(ம-14)

# மருத்துவமனைகள் மூடப்படும் நிலை!

## அரச மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 14

மருந்துத் தட்டுப்பாட்டு நிலைமை தொடருமாக இருந்தால் கூடிய விரைவில் சுகாதாரத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்து, இலங்கையில் அரச மருத்துவமனைகள் மூடப்படும் நிலைமை ஏற்படலாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச மருத்துவமனைகளில் நிலவும் மருத்துவ நெருக்கடியால் அத்தியாவசியமற்ற சத்திர சிகிச்சைகளை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதையடுத்தே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரான மருத்துவர் வாசன் இரத்னசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(ம)

# தரம் 8 இல் இருந்து 'செயற்கை நுண்ணறிவு'

## புதிய பாடம் அறிமுகம்

கொழும்பு, பெப். 14

செயற்கை நுண்ணறிவு எனும் புதிய பாடத்தைத் தரம் 8இல் இருந்து ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு விருப்பப் பாடமாக அல்லது பிரதான பாடத்திட்டத்தில் இந்தப் பாடம் சேர்க்கப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

6-13 வரையான தரங்களுக்குரிய அனைத்துப் பாடத்திட்டங்களும் அடுத்தவருடம் முதல் புதுப்பிக்கப் படவுள்ளன. இளைஞர்களின் எதிர்காலம் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது. அதன்படி செயற்கை நுண்ணறிவு எனும் புதிய பாடத்தை தரம் 8இல் இருந்து ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. செயற்கை நுண்ணறிவுப் பாடம் ஒரு விருப்பப் பாடமாக அல்லது பிரதான பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும். மாணவர்கள் அந்தப் பாடத்தைத் தகவல் தொழில்நுட்பப் பாடங்களுடன் படிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். இந்த அனைத்துக் கல்வி மாற்ற செயல்முறைகளுக்கு அடிப்படையான கல்வியை டிஜிற்றல் மயமாக்கும் கொள்கைக்கு இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்படும் - என்றார்.

(ச-இ)

# மக்களின் உயிருடன் விளையாடுகிறது அரசு

## மருத்துவர் நளிந்த காட்டம்

கொழும்பு, பெப். 14

மக்களின் உயிருடன் அரசாங்கம் விளையாடுகிறது என்று மருத்துவ உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவரும், ஜே.வி.பி. உறுப்பினரும், பொது மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவருவமான மருத்துவர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சத்திர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சத்திர சிகிச்சைகளை ஒத்திவைக்குமாறு சுகாதார அமைச்சு விடுத்த வேண்டுகோள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கம் சுகாதாரத்துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே மருத்துவ அணுகலில் தடைகளை ஏற்படுத்துகிறது. கடந்த இரு வருடங்களாக நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

சுகாதாரத்துறையில் ஊழல் நிரம்பியுள்ளது. ஊழலை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இந்திய மருந்துகள் உற்பத்தியாளர் ஒருவருடன் மருந்து வகைகள் கொள்வனவு செய்யச் சென்றிருந்தார்.

ஆனால் அந்த உற்பத்தியாளரது நிறுவனம் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட நிறுவனமாகும் - என்றார்.

(ம-14-6)

# 'புலர்காலையின் வலி' நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், பெப்.14

இயல்வாணனின் 'புலர்காலையின் வலி' நூல் அறிமுக விழா, எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இமையாணன் கலைமகள் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தலைமையுரை, நூல் அறிமுகவுரை ஆகியவற்றை சு.குணேஸ்வரனும் விமர்சன உரையை சித்தாந்தன், இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

(ம-14)



# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.14

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைக் கிளைத் தலைரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிடும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்கள் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 பேராசிரியர்களுடன் ஒரே மேடையில் சஜித்

கொழும்பு, பெப். 14
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் ஒரே மேடையில் 25 பேராசிரியர்கள் கலந்துகொண்டுள்ளனர் என்று கொழும்பு ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் குருநாகலில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன்போதே 25 பேராசிரியர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துடன் மேடையில் அமர்ந்திருந்தனர் என்று அந்த ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது. (ம-14-22)

# சமஷ்டியைக் கோராதீர்கள் ஒருபோதும் தரமாட்டோம்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 14
சமஷ்டித் தீர்வைக் கேட்கவேண்டாம் எனத் தமிழ்த் தலைவர்களிடம் சொல்கின்றோம். சமஷ்டிக்கு நாம் கடும் எதிர்ப்பு. ஒருபோதும் சமஷ்டித் தீர்வை நிறைவேற்றவே முடியாது எனத் இராஜாங்க அமைச்சர் கே.டபிள்யூ.சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்கள் அன்றிருந்து இன்றுவரை கேட்பது அரசியல் தீர்வைத்தான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்குச் செல்கின்றபோது தமிழ் மக்கள் அரசியல் தீர்வுகோரி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், ஒற்றையாட்சிக்குள் அதிகாரம் பகிரப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.
பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்றும், நாட்டைப் பிரிப்பதற்கு இடமளிக்கமாட்டாது என்றும் ஜனாதிபதி கூறிவருகின்ற போதிலும் சிலர் ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் தீர்வுக்கு எதிராகப் பேசி வருகின்றனர்.
தமிழ்த் தலைவர்களிடம் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம், தயவு செய்து சமஷ்டித் தீர்வைக் கேட்க வேண்டாம். சமஷ்டிக்கு நாம் கடும் எதிப்பு. ஒருபோதும் சமஷ்டித் தீர்வை நிறைவேற்றவே முடியாது. தமிழ்த் தலைவர்கள் சிலர் உண்மையில் தீர்வை விரும்பவில்லை. தீர்வு கிடைத்துவிட்டால் அவர்களால் அரசியல் செய்ய முடியாது. இதனால்தான் அவர்கள் வழங்கப்பட முடியாத சமஷ்டித் தீர்வைக் கேட்கின்றனர். நாம் ஒற்றையாட்சிக்குள் தீர்வை வழங்கத் தயார்.
அரசாங்கம் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. பொருளாதாரப் பிரச்சினை என்று வரும்போது அது இந்த நாட்டுக்கு மட்டும் உரியது அல்ல. முழு நாட்டிலும் உள்ளது. இங்கிலாந்தில் இப்போது வாழ்க்கைச் செலவினம் அதிகரித்துள்ளது. இப்போது எமது நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை கொஞ்சம் கொஞ்சமாகத் தீர்ந்து கொண்டு வருகின்றது. இந்த வருட இறுதிக்குள் நாம் ஒரு நல்ல நிலைக்கு வந்துவிடுவோம். மக்கள் அனைவரும் எமது இந்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ம)

## நெருக்கடிகளுக்குத் தீர்வு அரசாங்கத்திடம் இல்லை

### எரான் விக்கிரமரத்ன காட்டம்

கொழும்பு, பெப். 14
இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன காட்டமாகத் தெரிவித்துள்ளார்.
ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'இலங்கையின் தற்போதைய நிலையை வல்லுநர்கள் பலர் நெருக்கடியாக அடையாளப்படுத்துகின்றனர். இது திவாலான பொருளாதாரங்களுக்குத் தீர்வு காணாத மற்றும் பிற நாடுகளில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நாடுகளுடன் தொடர்புடையது. நெருக்கடிக் காலங்கள் விநியோக உந்துதல், பணவீக்கம் காரணமாக உணவு மற்றும் எரிசக்தி விலைகள் அதிகரிக்கும் அதேவேளையில் வட்டி விகிதமும் அதிகரிக்கின்றது.
நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் மாற்றங்களை அரசு கருத்தில் கொள்ளத் தவறியுள்ளது. நெருக்கடி காலங்களில் நிலைத்தன்மையை உருவாக்குவதே நிர்வாகத்தின் வழியாக இருக்க வேண்டும். அரசு பொருளாதாரத்தை தன்னிச்சையாக நிர்வகிக்கின்றது. ஒரு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டும். அதேவேளை, ஜனநாயகம் நிலவுவதை உறுதிசெய்வதற்கு உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்' - என்றார். (ம)

## கிழக்கு ஆளுநரின் கோரிக்கையை நிராகரித்தது ஜனாதிபதி செயலகம்

கொழும்பு, பெப். 14
கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தைத் தொடர்ந்தும் கொழும்பில் வைத்திருப்பதற்கு விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி செயலகம் நிராகரித்துள்ளது.
கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் கொழும்பில் குத்தகைக்குப் பெற்ற கட்டடத்தில் தனது அலுவலகத்தை நடத்தி வந்துள்ளார். குத்தகைக்குப் பெற்ற கட்டடங்களில் அலுவலகங்களை வைத்திருக்க முடியாது என திறைசேரி அண்மையில் சுற்றுநிருபம் அனுப்பியிருந்தது.
எனினும் கிழக்கு மாகாண ஆளுநர், தனது அலுவலகத்தைத் தொடர்ந்தும் கொழும்பில் வைத்திருப்பதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கையை ஜனாதிபதி செயலகம் நிராகரித்துள்ளது. (ம-14-6)



## இலங்கை – சீனா உறவுகள் இந்திய நலனைப் பாதிக்காது

### அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 14
இந்திய - இலங்கை உறவு என்பது எமது கலாசாரத்தின் அம்சம். சீனா எமது நீண்ட கால நண்பன். சீன இலங்கை உறவு எந்த விதத்திலும் இந்திய இலங்கை உறவைப் பாதிக்காது. அந்த விடயத்தில் நாங்கள் தெளிவாகவுள்ளோம் - இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.
இந்தியாவின் கொச்சினில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இமாச்சல பிரதேசத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே முறுகல் நிலை காணப்படுகிறது. இந்திய - இலங்கை உறவு என்பது எமது கலாசாரத்தின் அம்சம். சீனா எமது நீண்ட கால நண்பன் சீன - இலங்கை உறவு எந்த விதத்திலும் இந்திய - இலங்கை உறவைப் பாதிக்காது. அந்த விடயத்தில் நாங்கள் தெளிவாக உள்ளோம்.
இந்திய - இலங்கை உறவு என்பது குடும்ப உறவு. குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டால் நாங்கள் அதை குடும்பத்துக்குள்ளேயே பேசித்தீர்த்துக் கொள்வோம். உங்களது கடற்றொழில் அமைச்சர் இப்போது கொழும்பில் நிற்கிறார். அவர் எமது கடற்றொழில் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.
எமக்குள் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் நாம் அவற்றுக்கு பேச்சின் மூலம் நிரந்தரத் தீர்வைக் காண்போம் - என்றார். (ம-6)

## இலங்கைக்கு ஒத்துழைப்பு: போயிங்குடன் சுங் பேச்சு!

கொழும்பு, பெப். 14
இலங்கையின் தனியார் துறையுடன் ஒத்துழைப்பதற்கான சாத்தியம் குறித்து அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட முன்னணி உலகளாவிய விண்வெளி நிறுவனமான போயிங் அதிகாரிகளுடன் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கலந்துரையாடியுள்ளார்.
அமெரிக்கா மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுடனான கூட்டாண்மை இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் நவீனமயமாக்கலுக்கு முக்கியமாகும். இதன் அடிப்படையில் இலங்கையின் தனியார் துறையுடன் ஒத்துழைப்பதற்கான சாத்தியங்கள் குறித்து விவாதிப்பதற்காக அமெரிக்காவை தளமாகக் கொண்ட போயிங் நிறுவனத்தின் மூத்த பிரதிநிதிகளை தாம் சந்தித்ததாக தூதுவர் தெரிவித்துள்ளார்.
ஒரு முன்னணி உலகளாவிய விண்வெளி நிறுவனமாக போயிங் 150 க்கும் மேற்பட்ட நாடுகளில் வாடிக்கையாளர்களுக்கு வணிகவிமானங்கள், பாதுகாப்பு பொருள்கள் மற்றும் விண்வெளிக் கட்டமைப்புகளில் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## விகாராதிபதியின் இருப்பிடத்தில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, பெப். 14
மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம மற்றும் கெவிலியாமடு சுமன ரதன ஆகிய விகாரைகளின் விகாராதிபதி அம்பிட்டிய சுமன ரதன தேரரின் இருப்பிடத்தை இலக்குவைத்து நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற வேளையில் சுமன ரதன தேரர் அறைக்குள் இருந்தார் எனக் கூறப்படுகிறது. இதனால் சம்பவத்தில் சுமன ரதன தேரருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கலாசார மண்டபத்தில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிப்பு

## முறையிட்டும் நடவடிக்கையில்லை

மன்னார், பெப். 14

மன்னார் நகரசபைக்குச் சொந்தமான கலாசார மண்டபத்தில் விசேட தேவையுடையோருக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் தாம் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர் என்று மன்னார் மாவட்ட விசேட தேவையுடையோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 800 க்கும் மேற்பட்ட விசேட தேவையுடையோர் உள்ளனர். மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறும் கலை சார்ந்த விழாக்கள் மற்றும் திருமணம் போன்ற நிகழ்வுகளில் விசேட தேவையுடையோருக்கான அணுகும் வசதி செய்து கொடுக்காததால் விழா மேடைக்குச் செல்ல முடியாமல் கீழேயே நிற்க வேண்டியுள்ளது.

முக்கியமாக நூல் வெளியீடு, கௌரவிப்பு, கலாசாரம் போன்ற நிகழ்வுகளில் மேடையேறவேண்டும் என்ற நிலையில் இரண்டு அல்லது மூன்று பேர் தூக்கிச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. இது மற்றவர்களுக்கு சிரமத்தைக் கொடுப்பது போல் உள்ளது. இது தொடர்பாக பல அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



எனவே உரிய அதிகாரிகள் கவனமெடுத்து மன்னார் நகரசபை, பிரதேசசபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் மாடிக்கட்டடம் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் விசேடதேவையுடையோருக்கான அணுகும் வசதியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றனர். (ம-14.213)



# தொன்மையான நாணயங்கள் இளவாலையில் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 14

65 நாடுகளின் தொன்மையான நாணயக் குற்றிகள், நாணயத்தாள்கள் மற்றும் முத்திரைகள் போன்றன இளவாலை சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் கண்காட்சிக்காக வைக்கப்பட்டன.

அருட்பணிச்சபை மற்றும் புனித ஞானப்பிரகாசியார் மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தவரும் வவுனியாவில் வசிப்பவருமான முத்துலிங்கம் வாமணன் என்பவர் நீண்டகாலமாகச் சேகரித்த முத்திரைகள் மற்றும் நாணயங்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன. இவர், 1996ஆம் ஆண்டிலிருந்து முத்திரைகள் மற்றும் நாணயங்களைச் சேகரிப்பதை தனது பொழுதுபோக்காகச் செய்து வருவதாகத் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி மூலம் மாணவர்களை தேவையற்ற இலத்திரனியல் உலகில் இருந்தும் அநாவசிய செயற்பாடுகளில் இருந்தும் விலக்கி பயனுள்ள பொழுதுபோக்கில் ஈடுபடுத்துவது நோக்கமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-14)

## கடந்த வருடம் மாத்திரம்

# போதைப்பொருள் கடத்தல்: 91,384 பேர் கைதாகினர்!

2022 ஆம் ஆண்டு மட்டும் போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டின் கீழ் 91 ஆயிரத்து 384 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 46 ஆயிரத்து 528 பேர் ஹெரோய்னுடனும், 34 ஆயிரத்து 499 பேர் கேரளக் கஞ்சாவுடனும் 27 பேர் ஹொக்கெய்னுடனும், 10 ஆயிரம் பேர் ஐஸ் போதைப்பொருளுடனும், 65 பேர் ஹசிஷ் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவளை, கடந்த மாதம் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 5 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படைப்பேச்சாளர் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மீனவர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர். தென் பகுதிக்கடலில் பாகிஸ்தானிலிருந்தும் ஈரானிலிருந்தும் கொண்டுவரப்படும் ஐஸ், ஹெரோய்ன் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் விக்கிரமசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (ம-14.6)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்: தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்மாமன் வழியில் வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

# ஊடகர் சத்தியமூர்த்திக்கு முல்லையில் நேற்று அஞ்சலி

முல்லைத்தீவு, பெப். 14

ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் அவரின் திருவுருவப் படத்துக்கு ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டு சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

ஊடகத்துறையில் 1990 களில் இருந்து ஈடுபடத் தொடங்கிய சத்தியமூர்த்தி, 2009 பெப்ரவரி 12 ஆம் திகதி முல்லைத்தீவு, தேவிபுரம் பகுதியில் இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-14)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## உயிர்த்தெழலும் ஊதுகுழலும்!

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று இன்னொருமுறை தெரிவித்திருக்கின்றார் தமிழக அரசியல் தலைவர்களில் ஒருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான உறவுநிலையைக் கொண்டிருந்தவருமான பழ.நெடுமாறன். 'பிரபாகரனின் குடும்பத்தினருடன் நான் தொடர்பில் இருக்கின்றேன். பிரபாகரன் தற்போது உயிருடன் இருக்கின்றார். அவர் விரைவில் மக்கள் முன்னிலையில் தோன்றுவார். இதை அவரின் (பிரபாகரனின்) அனுமதியுடன்தான் தெரிவிக்கின்றேன்' என்று அழுத்தம்திருத்தமாக அவர் செய்தியாளர்களிடம் கூறியிருக்கின்றார். தேசியத் தலைவர் பிரபாகரன் 'இருந்தால் தலைவன்: இல்லாவிடின் இறைவன்' என்பதுதான் தமிழர்களின் நிலைப்பாடு. அதில் இம்மியும் மாற்றுக்கருத்துக்களோ இரண்டாவது விவாதங்களோ – மாறுபட்ட பொருள்கோடல்களோ இல்லை. பிரபாகரன் உயிருடன் இருப்பதென்பது உண்மையாயின் அது ஈழத் தமிழர்கள் ஆர்ப்பரிக்கும் – கொண்டாடித்தீர்க்கும் விடயம்தான். ஆனால், பழ.நெடுமாறனின் கருத்துக்களை கண்மூடித்தனமாக நம்புவதற்கும் தமிழர்கள் தயாரில்லை.

தேசியத் தலைவர் உயிருடன் இருக்கின்றார் என்று ஏற்கனவே பலமுறை பழ.நெடுமாறன் தெரிவித்தே வந்திருக்கின்றார். ஆனால், இம்முறை கூறியதுபோல ஆணித்தரமான ஆதாரம் இருப்பதாகவும் விரைவில் தலைவர் தோன்றுவார் என்றும் அவர் அறுதிபடச் சொல்லியதில்லை. இப்போது திடீரென மீண்டும் தலைவரின் உயிர்த்தெழல் பற்றி நெடுமாறன் ஏன் வெளிப்படுத்த வேண்டும்? என்ற ஒரு கேள்வி பரந்துவிரிந்து நீள்கின்றது. 2009ஆம் ஆண்டு புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர் பிரபாகரனின் உயிர்ப்பை – அவரின் இருப்பை (உயிருடன் இருக்கின்றார் என்றால்) வெளிப்படுத்த வேண்டிய எத்தனையோ சந்தர்ப்பங்களைத் தமிழினம் எதிர்கொண்டது. அப்போதெல்லாம் மௌனமாக இருந்த பழ.நெடுமாறன், தற்போது இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருப்பதானது ஒரு மடமைத்தனமே அன்றி வேறில்லை.

13ஆவது திருத்தத்தை தமிழர்கள் தீர்வாக ஏற்றுக்கொள்ளாவிடினும், அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் அண்மைக்காலமாக கொழும்புக்கு திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியைச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் தமிழரின் நலன்சார் சிந்தனைகள் சர்வதேசத்தால் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படியிருக்கையில் இந்தச் செயற்றிட்டங்களையெல்லாம் தகர்த்தெறியும் வல்லமை பெற்றது பழ.நெடுமாறன் வெளிப்படுத்திய இந்த ஒற்றைக்கூற்று. இந்தக் கூற்று இன்னொரு வகையிலும் அதிமுக்கியத்துவம்மிக்கது. அங்குதான் இலங்கையின் எதிர்கால அரசியலும் அதன் போக்கும் புதைந்திருக்கின்றது. போர் தின்றொழித்த நாள்களிலும் அதன் பின்னரும்கூட இலங்கையின் அரசியலையும் மஹிந்த தரப்பினரது வாக்குவங்கியையும் தீர்மானிப்பவர்களாக தேசியத் தலைவர் பிரபாகரனும் விடுதலைப் புலிகளுமே இருந்தனர். தென்னிலங்கை மக்களிடம் விதைக்கப்பட்ட 'புலிப்பயம்' 2010ஆம் ஆண்டு அசுர வெற்றியுடன் மஹிந்தவை ஜனாதிபதியாக்கியது. மைத்திரி – ரணில் அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், இனி ராஜபக்சக்களின் மறுவருகை சாத்தியமில்லை என்ற நிலைப்பாடே இருந்தது. எனினும் 2019ஆம் ஆண்டு சஹ்ரான் தரப்பினர் மேற்கொண்ட வெறியாட்டம் இலங்கைக்குள் பயங்கரவாதம் சார் சிந்தனையை மீண்டும் ஏற்படுத்தியது அல்லது ஏற்படுத்தப்பட்டது. இதுவே ராஜபக்சக்கள் மீண்டும் எழுச்சிபெறவும் கோத்தாபய ஜனாதிபதியாகவும் வழிவகைகளை ஏற்படுத்தியது.

பொருளாதாரப் பேரிடர் கோத்தாபயவை ஆட்சியிலிருந்து விரட்டியது. இனி ராஜபக்சக்கள் இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்க முடியாது. அவர்களின் அரசியல் விரைவில் முற்றுப்பெறுகின்றது என்றிருக்கையில், தேசியத் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கின்றார் என்று பழ.நெடுமாறனால் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்தத் தகவலானது மஹிந்த தரப்பினருக்கும் பெரமுன தலைமையிலான கூட்டணியினருக்கும் பெரும் பிடிமானம். இந்தப் பிடிமானத்தை அவர்கள் நிச்சயம் தவறவிடப்போவதில்லை. தேசியத் தலைவர் உயிரோடு இருப்பது தொடர்பான கருத்து உண்மை போன்ற விம்பம் கட்டியெழுப்பப்பட்டால் 'ராஜபக்சக்களால்தான் சிங்கள மக்களைக் காப்பாற்றமுடியும்' போன்றதான நிலைப்பாடு தென்னிலங்கையில் மீண்டும் வலிந்து தோற்றுவிக்கப்படும். அவ்வாறு இல்லாமல் இறுதிப்போரின்போது தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்பதை ராஜபக்சக்கள் நிரூபிப்பதனூடாக இன்னொரு தடவை போர் வெற்றிக் கோஷத்தை தூசுதட்டி அதனை புதியதுபோல காண்பித்து வாக்குகளை வேட்டையாடவும் வழியுண்டு.

பழ.நெடுமாறனின் கருத்து தொலைநோக்கற்றது. சிந்தனை வறட்சியுடையது. ஒருவேளை பழ.நெடுமாறன் சொல்வதுபோல உண்மையிலேயே தலைவர் பிரபாகரன் உயிரோடு இருந்தால் அதனை இப்படி உலகுக்குப் பறைதட்டத் தேவையில்லை. அதைத் தலைவரும் விரும்பியிருக்கமாட்டார் என்பது தலைவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும். தன் மீது தமிழினம் வைத்திருந்த பெருமதிப்பை தலைவரின் உயிர்த்தெழல் பற்றிய தகவலை பகிர்ந்த கையோடு பழ.நெடுமாறன் வெளியிட்ட 'இந்திய நலன்சார்' அறிக்கை இல்லாமல் செய்துவிட்டது என்பதே உண்மை.

**நாளொரு நல்வார்த்தை**

இன்று உன்னால் கூடிய மட்டும் நன்றாகச் செய். நாளை அதனிலும் நன்றாகச் செய்யும் ஆற்றலை நீ பெறக்கூடும். **– ஐசக் நியூட்டன்**




# ஜே.வி.பி.யின் ஆட்சியில் ஜனநாயகம் இருக்காது!

## மஹிந்தானந்த சீண்டல்



கொழும்பு, பெப். 14

வன்முறையை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியமைத்தால் ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்படும் என முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டவாறு இடம்பெறும். தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை. உள்ளூராட்சித் தேர்தல் அரச கட்டமைப்பில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தாது. எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமே ஆட்சி செய்யும். தேர்தலைப் பிற்போடுவது, தேர்தலுக்கு இடையூறு விளைவிப்பது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் கொள்கை அல்ல. தேர்தலில் வெற்றி, தோல்வி என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்கவேண்டும் என்ற கொள்கையை முன்னிலைப்படுத்தி அவர் நெருக்கடியான சூழலில்கூட தேர்தல்களை நடத்தியுள்ளார். தவறான பரப்புரைகளால் நாட்டுக்கு உண்மையாகச் சேவை செய்தவர்களை வீழ்த்த முடியாது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் ஏற்படும் விளைவுகளைப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அரசமைப்புக்கு அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். மக்களின் அடிப்படை உரிமை மற்றும் பொருளாதாரம் ஆகிய இரு பிரதான விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடக் கட்சி என்ற ரீதியில் தயாராக உள்ளோம். உள்ளூராட்சித் தேர்தல் அரச கட்டமைப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. எதிர்வரும் இரு ஆண்டுகளுக்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமே ஆட்சி செய்யும்.

பேஸ்புக் ஜனாதிபதியாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலம் வருகிறார். தற்போது ஜனநாயகம் மற்றும் தேர்தல் உரிமைகள் தொடர்பில் பரப்புரை செய்யும் மக்கள் விடுதலை முன்னணியின் பூர்வீகத்தை மூத்த தலைமுறையினர் நன்கு அறிவார்கள். வன்முறையை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியமைத்தால் ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்படும் - என்றார். (ம)

| | | |
|---|---|---|
| நாளை | 15.02.2023<br>புதன்கிழமை<br>மாசி 03 | சுபநேரம் : 05.03 - 06.33<br>ராகுகாலம் : 12.33 - 02.03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்புள்ள அணியை வீழ்த்தியது யாழ்ப்பாண அணி

தம்புள்ள இளையோர் அணியை 12 ஓட்டங்களால் தோற்கடித்தது யாழ்ப்பாணம் மாவட்ட இளையோர் அணி. வடக்கு மாகாண பிரதமசெயலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட இளையோர் அணிக்கும், தம்புள்ள மாவட்ட இளையோர் அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான துடுப்பாட்டம் (20 பந்துப்பரிமாற்றங்கள்) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணி 9 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய தம்புள்ள அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 121 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதையடுத்து 12 ஓட்டங்களால் வென்றது யாழ்ப்பாண இளையோர் அணி. (ம-27)





# சேதுசமுத்திரக் கால்வாய்

# அவசியமும் ஆபத்து நிலைகளும்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடற்பிரதேசத்தினுடாக கப்பல்கள் செல்வதற்கு ஏதுவாகவுள்ள சுமார் 83 கிலேமீற்றர் நீளமான சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் காலத்துக்குக்காலம் பேசப்படுகின்றது. சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இந்தத் திட்டம் குறித்து முதன்முதலில் பேசப்பட்டது. அதன்பின்னர் நேரு காலத்தில் உருவாக்கப்பட்ட ஐந்தாண்டு திட்டங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலில் தேர்தல்களில் பங்குகொண்ட காலகட்டங்கள் என வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பேசப்பட்டிருக்கின்றது.

ஆனாலும் திட்டவட்டமான செயற்பாடுகளெவையும் முன்னெடுக்கப்படவில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின்னர் பாரதீய ஜனதா அரசு திட்டவட்டமான செயற்பாடுகளை ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சியாக சேதுசமுத்திரக்கால்வாய் திட்டம் பூர்வாங்கமாக அறிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் எத்தகைய செயற்பாடுகளையும் காணமுடியவில்லை.

தற்போது மும்பையிலிருந்து கொல்கத்தா செல்லும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றியே செல்லுகின்றன. ஆனால், பல கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள சேதுசமுத்திரக்கால்வாய் மூலமாக இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கான கப்பல் போக்குவரத்து இந்தியக் கடற்பரப்புகளுடர்கவே நடைபெறலாம். அதனால் பயணத்தூரம் மட்டுமல்ல பயணநேரமும் கணிசமாகக் குறைவடைந்து செலவினங்களும் குறைவடையும். அதுமட்டுமன்றி மேற்படி திட்டம் சர்வதேச கப்பல் போக்குவரத்திலும் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தவல்லதாகக் கருதப்படுகின்றது.

செங்கடல் மற்றும் பாரசீக வளைகுடாவிலிருந்து சீனா ஜப்பான் உள்ளிட்ட கிழக்காசிய நாடுக்ளுக்கான பெற்றோலியம் மற்றும் கொள்கலன் போக்குவரத்து என்பன தற்போது மலாக்கா கடற்பரப்புகளுடாகவே நடைபெறுகின்றன.

சேதுசமுத்திரக்கால்வாய் உருவாகிய பின்னர் கிழக்காசிய கப்பல் போக்குவரத்து இந்தியக் கடற்பரப்புகளுடாக நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

### பலப்படும் பாதுகாப்பு

அத்துடன் பாதுகாப்பு விடயத்திலும் இந்தத் திட்டம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. 1970களில் இந்து சமுத்திரத்திலுள்ள டியாகோ கர்சியா தீவுகளை அமெரிக்க கையகப்படுத்திக் கொண்டபோதும், பங்களாதேஷ் போர்க் காலத்தில் அமெரிக்கப் போர்க்கப்பல் வங்காள விரிகுடாவில் பிரவேசித்தபோதும் இந்தியா மிகுந்த விசனமடைந்தது. அதன்பின்னரே இந்தோனேஷியா, தாய்லாந்து முதல் இலங்கை வரையான நாடுகளுடன் இந்தியா கடலெல்லை குறித்த உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொண்டது.

அந்தவகையில் பிராந்திய பாதுகாப்பிலும் சேதுசமுத்திரக் கால்வாய் ஆதாயமானதாகக் கருதப்படுகின்றது. ஆக, பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் பாதுகாப்பு ரீதியாகவும் மேற்படி திட்டம் பயனளிக்கூடியதாகவே கணிக்கப்படுகின்றது.

இலங்கையை பொறுத்தவரையில் வடமேற்குப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு சேதுசமுத்திரக் கால்வாய் உந்துதலளிக்கலாம். அன்றொருகாலத்தில், தமிழ்நாட்டின் கிழக்கு கரையூடாகவும் மாதோட்டம் துறைமுகம் வாயிலாகவும் கிரேக்க ரோமனிய சம்ராஜ்ஜியங்களுடன் செழிப்பான வாணிபம் நடைபெற்றது. அத்தகைய நிலை மீளவும் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.




## ஆபத்து அதிகம்

சேதுசமுத்திரக்கால்வாய் அமைக்கப்படும்போது ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகளும் கவனிக்கத்தக்கனவாகும். உலகிலேயே மிகவும் அரிதாகக் காணப்படும் கடல் உயிரினங்கள் பல மன்னார் வளைகுடாவில் காணப்படுகின்றன. அதனால்தான் ஒன்றரை தசாப்தங்களுக்கு முன்னரே அந்தக் கடல்பகுதி பாதுகாக்கப்படவேண்டிய பகுதியாக அறிவிக்கப்பட்டது. அதனைப் பேணுகின்ற பணியில் ஐ.நாவும் இணைந்துள்ளது. இந்திய சமுத்திரத்திலுள்ள மீன்வகைகளில் ஐந்தில் ஒருபங்கு மன்னார் வளைகுடாவில் காணப்படுகின்றன. டுயுகோங் எனப்படும் பாலுட்டி வகையைச் சேர்ந்த கடல்விலங்கு உலகிலேயே அங்குமட்டுமே காணப்படுகின்றது. ஐந்துவகையான கடல் முதலைகளில் ஐந்துமே அங்கு காணப்படுகின்றன. அரிய பல கடற்தாவரங்களும் பல்வேறு வகையான கோரல்களும் அங்கு காணப்படுகின்றன. உலகிலேயே சங்குவிளையும் கடற்பரப்புக்களில் மன்னார் வளைகுடா முக்கியமானதாகும்.

சேதுசமுத்திரக் கால்வாய் உருவாக்கப்படும்பொழுது அங்குள்ள இயற்கை வளங்கள் எத்தகைய பாதிப்புக்களுக்கு முகங்கொடுக்கப் போகின்றன? என்பது இன்று எழுகின்ற சந்தேகமாகும்.

சுமார் பதின்னோரடி ஆழமாகக் காணப்படுகின்ற மன்னார் வளைகுடாவை மேலும் ஆழப்படுத்தப்படும்போது அங்குள்ள கடல் அமைப்பு எவ்வாறான பாதிப்பை எதிர்கொள்ளப் போகின்றது? அங்கிருந்து அகற்றப்படும் மண்கழிவுகளின் அளவு செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சேம்பரபாக்கம் ஏரியை மூடக்கூடியதாகும். கடலை ஆழப்படுத்தும்போது அங்குள்ள மண் அணைவுகள் பாதிக்கப்படும். அதனால் கடலரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

வெப்பநிலை சீர்குலையும். அதனால் மழையளவு குறைவடைந்து தென்கிழக்கு தமிழகமும் யாழ். குடாநாடும் பாதிக்கப்படும். அவைமட்டுமல்ல, நிலத்தடி சமன்பாடுகள் மாற்றமடையும். அதனால் கடல்மட்டத்துக்குக் கீழ் காணப்படும் யாழ். குடாநாட்டின் நன்னீர்வளம் பாதிக்கப்படும். யாழ். குடாவுக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் காணப்படுகின்ற மியோசின் காலத்து சுண்ணாம்பு பாறைகள் தகர்ந்துபோகின்ற வாய்ப்பு காணப்படுகின்றது. அதனால் கடலுக்கு இருமருங்கிலுமுள்ள நிலப்பரப்புக்கள் காலப்போக்கில் காணாமற்போகலாம்.

இவ்வாறாக இயற்கைவளம், பொருளாதாரம், வர்த்தகம், பாதுகாப்பு என பல்வேறு விடயங்களில் அழுத்தமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சேதுசமுத்திரக்கால்வாய் குறித்த கூர்மையான பார்வையின் அவசியம் முன்னெப்போதிலுமே இல்லாத வகையில் இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரணியில் கசிப்பு மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.14

கொடிகாமம், வரணியில் 40 லீற்றர் கசிப்பும், 80 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் பரிசோதகர் மு.உதயானந்த் தலைமையிலான பொலிஸ் குழுவே நேற்றுமுன்தினம் இரவு இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.

இது தொடர்பில் 31 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## கச்சதீவு பெருநாள் வியாபாரத்துக்கு இடம் வழங்கப் பதிவு முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

கச்சதீவு பெருநாள் மார்ச் மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் விழாவை முன்னிட்டு வியாபார நோக்கங்களுக்காகக் கடைகள் நடத்துவதற்கு இடத்தைப் பெறவிரும்பும் வியாபாரிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நெடுந்தீவு பிரதேசசபையில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதிவுகளை மேற்கொள்ளும் முன்னுரிமை அடிப்படையிலேயே இட ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் நெடுந்தீவு பிரதேசசபைத் தவிசாளர் ந.சசிகுமார் தெரிவித்துள்ளார். (ம-14)


### அறை வாடகைக்குத் தேவை

கந்தர்மடச் சந்திக்கு அண்மையாக (1-3km தூரத்தில்) தனியறை ஒன்று பிரத்தியேக குளியல் அறையுடன் ஒரு ஆண் உத்தியோகத்தருக்கு 5 மாதகால வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- ராம் (CS 23490) 4.6

011 2505939/ 011 258 4830


# மரண அறிவித்தல்

தோற்றம் 29 • 09 • 1930



மறைவு 11 • 02 • 2023

## நாகரத்தினம் சிதம்பரநாதன்

(ஓய்வுநிலை அதிபர்)

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் சிதம்பரநாதன் கடந்த (11-02-2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம்பிள்ளை மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பையா சிதம்பரநாதன் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாசனி, சோமாஸ்கந்தன், சதானந்தன் (T.S), நாகலோசனி (பாப்பா), காலஞ்சென்ற ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரேமகுமார், தபோநிதி, தவயோகினி, காலஞ்சென்ற செல்வரத்தினம், பராசக்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னத்துரை, இராசையா, இராசம்மா, தங்கம்மா, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜன், ராகுலன், குகதர்சினி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், ஞானகௌரி, சண்முகி, சாருஜன், விதுஷன் உமாசுதன், நவநீதன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும்,அமுதன் லூயிஸ் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (15-02-2023) புதன்கிழமை காலை 07:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10:00 மணியளவில் பூனாவோடை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
Mobile : +94752261420
கந்தரட்ணம் (Painter Sri)
வீரபத்திரர் கோவிலடி, அராலி தெற்கு,
அராலி முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு முன் ஒழுங்கை.

தகவல்:
குடும்பத்தினர்.


## பதவி வெற்றிடம்

பிரபல தனியார் கட்டட நிறுவனத்தில் (Accounts Assistant) கணக்கு உதவியாளர் பதவிக்கு குறித்ததுறையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் உள்ளவர்களை எதிர்பார்க்கின்றோம்

தகைமை: AAT / HNDA

வயதெல்லை : 40 ற்கு குறைவாக

Email: adminjaffna@Sanken.lk

முடிவுதிகதி: 15.02.2023

(cs 23496) (2.6)


# முதலாம் ஆண்டு திவச அழைப்பு



கடந்த (26.01.2022) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் யோகரட்ணம் இராஜேஸ்வரி

அவர்களின்

முதலாம் ஆண்டு திவசம் இன்று (14.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறுவதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேலம்பிராய், தச்சன்தோப்பு. (CR 39248) 1-6 குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

கடந்த 15.01.2023 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## முருகேசு மனோகரன்

(முன்னைநாள் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர், உரிமையாளர் - M.Murugan Multi Shop - பருத்தித்துறை)



அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (14.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் "கதிரமலை வாசம்" புலோலி மேற்கு, கிராமக்கோடு, பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

"கதிரமலை வாசம்"
புலோலி மேற்கு,
கிராமக்கோடு. (22912)4.6

முருகதாஸ் (மகன்) - 0041 7923 67235
சுமதி (மகள்) - 003378 1114318
அரியமலர் (மனைவி) - 021 226 5621
தயானந்தன் (பேறாமகன்) - 077 344 3034

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லத்துரை தங்கம்மா (குஞ்சம்மா)

ஆண்டொன்று நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவுகள்
உங்கள் நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அன்னையே
அன்பினால், பண்பினால், நட்பினால் ஆளுமையால்,
விருந்தோம்பலால் கொடையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும்
குடியிருக்கும் எங்கள் அன்னையை
நாம் என்னென்றும் நினைந்திருப்போம்.

அன்னையின் ஆத்மா இறைபாதம் அடைய பிரார்த்திப்போமாக...

செட்டி வளவு, அளவெட்டி வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். (CR 39247)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



தாதிய உத்தியோகத்தராகவும், விடுதி
பொறுப்பு தாதிய உத்தியோகத்தராகவும்
30 வருடங்கள் பணியாற்றி இன்றுடன்
(14.02.2023) ஓய்வுபெற்றுச் செல்லும்

## திரு.சிவராசா கிரிதரன்

அவர்கள் ஓய்வுகாலத்தில் சிறந்த
தேக ஆரோக்கியத்துடன் வாழ
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**தாதிய நலன் புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

(CS 23498) 1-6

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# துணைவேந்தர் பதவி

இந்த செய்தித்தாளில் வெளிவந்த துணைவேந்தர் பதவி குறித்த 27.01.2023 திகதியிடப்பட்ட விளம்பரத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள்/பெயர்மொழிவுகளுக்காக கோரும் விளம்பரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க ரத்து செய்யப்படுகிறது. துணை வேந்தர் பதவிக்கான நியமனம் தொடர்பான செயல்முறை புதிதாக தொடங்கும். மேலதிக விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

**விசுவநாதன் காண்டீபன்**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**பதிவாளர் அலுவலகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**13.02.2023**

(CR/39245)4,6

---

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
## Jaffna International Trade Fair

13 EDITION

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

jitf.lk
www.jitf.lk

JITF 2023

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2023

## MARCH மார்ச்

## 3 4 5

9.00 மு.ப - 7.00 பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

MAIN SPONSOR: TOKYO CEMENT GROUP
CO SPONSOR: Maliban Inspiring Goodness
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL PARTNERS: SNACK, SPICE, ILLUMINATION, HYGIENE, T-SHIRT, PRINT MEDIA, EDUCATION, TYRE, RENEWABLE ENERGY, RIDING
SUN, உதயன், NorthernUNI, AROMA, Hayleys Fentons

## ஸ்டால்களுக்கான முன்பதிவு
## RESERVATION FOR STALLS

Imalka: +94 71 7488107, +94 77 1093792 | imalka@saexhibitions.com

---

ICCR

सत्यमेव जयते

75 Azadi Ka Amrit Mahotsav

**இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தின**
**"ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்"**
**கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக**
**யாழ் இந்திய துணைத் தூதரகம்,**
**மற்றும்**
**இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் (ICCR)**
**இணைந்து வழங்கும்**



# கர்நாடக இசை கச்சேரி

**இந்தியாவின் பிரபல**
**கர்நாடக இசை கலைஞர்**
**கலாநிதி அருந்ததி பகவதீஸ்வர ஐயர்**
**மற்றும் அவருடைய குழுவினர்.**

**காலம் : 15 பெப்ரவரி, 2023**
**இடம் : யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்**
**நேரம் : மாலை 6.00 மணிக்கு**

இசை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# துருக்கி நிலநடுக்கம் பலி 50,000 தொடும்!

## ஐ.நா. அதிர்ச்சி அறிக்கை

அங்கரா, பெப். 14

துருக்கி சிரிய எல்லைப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இதுவரை 35 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ள நிலையில், இந்த எண்ணிக்கை 50 ஆயிரமாக அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.



துருக்கி - சிரிய எல்லைப் பகுதியில் கடந்த 6ஆம் திகதியன்று ஏற்பட்ட இரு பெரும் பூகம்பங்களாலும் அடுத்தடுத்த 400 சிறு நிலஅதிர்வுக ளாலும் அந்தப் பகுதியில் வரலாறு காணாத அழிவு ஏற்பட்டுள்ளது. சுமார் ஆயிரம் கட்டடங்கள் முழுமையாக அழிவடைந்த நிலையில் அங்கு மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், இதுவரையிலுமான மீட்புப் பணிகளின் அடிப்படையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. 50 ஆயிரம் பேர் உயிரிழக்க சாத்தியமுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.



70 வீதமான கட்டட இடிபாடுகளிலேயே இதுவரை மீட்புப் பணிகள் இடம்பெற்றுள்ளன. இதர பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்கின்றன. இதனால் தான் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், படுகாயமடைந்த சுமார் 65 ஆயிரம் பேரில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாலும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

### துருக்கியில் நேற்றும் நிலநடுக்கம்!

துருக்கியில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற நிலநடுக்கத்தின் மீட்புப் பணிகள் முழுமை பெறாத நிலையில், அங்கு நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் சிரியாவின் எல்லையையொட்டி அமைந்துள்ள காசியான்டெப் நகரத்தில் கடந்தவாரம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. துருக்கியின் கராமன்மராஸ் பகுதியில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லையாயினும், மக்களால் அதை உணரக்கூடியதாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அமெரிக்க வான்வெளியில் மீண்டும் மர்மப்பொருள்!

வொஷிங்டன், பெப். 14

அமெரிக்க வான்வெளியில் மீண்டும் ஒரு மர்மப் பொருள் அந்த நாட்டு இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. ஒரே வாரத்தில் இது 4ஆவது சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது.

பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சீன உளவு பலூன் ஒன்று அமெரிக்க ராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்த பலூன் தங்கள் நாட்டுடையதுதான் என்றும் வானிலை ஆய்வுக்காக தனியார் நிறுவனம் அனுப்பியது திசை மாறி அமெரிக்க வான் எல்லைக்குள் வந்துவிட்டது என்றும் சீனா விளக்கமளித்தது. ஆனால் அதை ஏற்க மறுத்தது அமெரிக்கா. இதைத் தொடர்ந்து கனடாவின் வான்பரப்பிலும் சில மர்மப்பொருள்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் வான்பரப்பில் மீண்டும் ஒரு மர்மப் பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. (ம)



## 13 ஆம் திருத்தம் தொடர்பில் புதிய செய்தி வெளிவரும்!

நாடு திரும்பிய அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, பெப். 14

13ஆவது திருத்தம் தொடர்பான புதிய செய்தியை விரைவில் எதிர்பார்க்கலாம் என்று பார்தீய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார். இலங்கைக்கு வருகை தந்து சென்னை திரும்பியுள்ள அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

'இதற்கு முன் உலகின் எந்தத் தலைவர்களும் செல்லாத தூரத்தை மோடி இலங்கைக்குள் சென்றுள்ளார். 2015 ஆம் மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் பிரதமர் மோடி இலங்கைக்கு மேற்கொண்ட இரண்டு பயணங்களும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாகும். இலங்கைத் தமிழர்களின் காயங்கள் மெல்ல மெல்ல ஆறி வருகின்றன. வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவடைந்துவிட்டன அல்லது முடியும் தறுவாயில் உள்ளன. 2015ஆம் ஆண்டு மோடியின் இலங்கைப் பயணம், முந்தைய இந்திய அரசாங்கத்தின் திறமையின்மைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, வளர்ச்சிக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான இந்தியாவின் நோக்கத்தை உறுதிப்படுத்தியது. வடமாகாணத்தின் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் காரைக்காலுக்கும் இடையில் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. கப்பல் சேவைக்கான கேள்வி மனுக்கோரல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் கடிதம் மூலமும், உணர்வுபூர்வமாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். இந்த விடயம் தொடர்பான புதிய செய்திகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் வடமாகாண மக்கள் பெருமளவில் பயனடைவர். இதேவேளை- மோடியின் நடவடிக்கைகளின் விளைவே, இந்தப் பகுதியில் சீனாவின் செல்வாக்கு தணிந்திருப்பதற்கான காரணம்' என அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## ஆண் ஒருவரின் எச்சங்கள் மீட்பு

வவுனியா, பெப். 14

வவுனியா- ஈரப்பெரியகுளம் புதியநகர் காட்டுப்பகுதியில் ஆண் ஒருவரின் மனித எச்சங்கள் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட மனித எச்சங்கள் கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்பு அதேபகுதியில் காணமற்போன ஒருவரின் எச்சமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த ஜிந்தக்க ராஜபக்ச (வயது -43) என்பவரே இவ்வாறு காணாமற்போயிருந்தார். (ஒ-110)

### மது அருந்தியமைக்கு

## தாயார் கண்டிப்பு மகன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

மது அருந்தியதைத் தாய் கண்டித்ததை அடுத்து 14 வயது மாணவரொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கைதடியில் நடந்துள்ளது.,

நேற்றுமுன்தினம் இரவு குறித்த மாணவன் மதுபோதையில் காணப்பட்டதை அடுத்து தாய் கண்டித்து, அடித்துள்ளார். அதையடுத்து தவறான முடிவெடுத்து நஞ்சு மருந்தை அவர் அருந்தினார். அதனையடுத்து அந்த மாணவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ஒ.26.159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் சிக்கிய இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 14
விபத்தில் சிக்கி படுகாயமடைந்த 29 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை, குரும்பசிட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சயந்தன் என்ற இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இவருக்கு திருமணமாகி இரு மாதங்களே ஆகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து கடந்த மாதம் 7ஆம் திகதி நடந்துள்ளது. கொடிகாமம் - மட்டுவில் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது உழவு இயந்திரத்துடன் மோதி விபத்து நடந்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். விபத்துத் தொடர்பான விசாரணைகள் சாவகச்சேரி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ஓ-26)

## வாள்வெட்டில்...

கடும் காயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் உருத்திரபுரம் - சிவநகர் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் யசோதரன் (வயது-44) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இரு குழுவினருக்கு இடையில் கடந்த 3 ஆண்டுகளாககருத்து மோதல்கள்இருந்து வந்துள்ளன. இவர்களுக்கு இடையில் இதற்கு முன்னரும் சில தடவைகள் கைகலப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இறப்பு வீடொன்றில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அது கைகலப்பாக மாறியது. ஒரு தரப்பு வேறிடங்களைச் சேர்ந்தவர்களையும் அங்கு அழைத்துள்ளது. வாள்வெட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும், தாக்குதலை நடத்திய குழுவைச் சேர்ந்த ஒருவருமாக 4 பேர் அம்புலன்ஸ் ஊடாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவரே உயிரிழந்துள்ளார். மற்றைய இருவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றைய நபர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஓ-113)

## 4 தமிழ்...

களுக்கு எதிரான வழக்கு, காலி மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பிணை வழங்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18 ஆம் திகதி காலிதெற்கு கடற்படைமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததுடன், 22 பேர் காயமடைந்தமை தொடர்பில் 23 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் காலி மேல் நீதிமன்றில் 2010ஆம் ஆண்டு நான்கு பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கின் முதலாவது பிரதிவாதியான சுந்தையா இளங்கோ, 2009 ஆம் ஆண்டு போர் முடிவின் பின்னர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், முதலாவது பிரதிவாதியால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற உண்மை விளம்பல் விசாரணையின் போது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதை பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் 2009 ஆம் ஆண்டு விமானப்படையால் நடத்தப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலில் முதலாவது பிரதிவாதி தனது வலது காலை இழந்துள்ளதுடன், 14 வருடங்களாக வழக்கு விசாரணை நிறைவு செய்யப்படாமை குறித்தும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி மன்றுக்கு எடுத்துரைத்துள்ளார்.

விடயங்களை ஆராய்ந்த காலி மேல் நீதிமன்ற நீதிபதி, 4 பிரதிவாதிகளுக்கும் பிணை வழங்கினார். 5 லட்சம் ரூபா பெறுமதியான காசுப் பிணை மற்றும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் பிரதிவாதிகளைச் செல்ல அனுமதித்தார்.

வழக்கு விசாரணையில் பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா முன்னிலையாகியதுடன், சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மொஹமட் பாரி மன்றில் தோன்றியிருந்தார். (அ-ஓ-5)

## ஆர்னோல்ட்...

யடுத்து மாநகரசபையின் பாதீடு இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை மேயராக இ.ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்ட முறைமைக்கு எதிராக இடைக்கால நிவாரணம் கோரி மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபனால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை- உள்ளூராட்சி தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

## 14 வயதுச்...

னர். கிளிநொச்சியைச் சேர்ந்த 14 வயதுப் பெண்ணை, உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான 16 வயது இளைஞன் காதலித்துள்ளார். சிறுமியை வீட்டைவிட்டு வெளியே வருமாறு கூறியதைத்தொடர்ந்து சிறுமியும் வீட்டில் உள்ள எவருக்கும் தெரியாமல் 5 பவுண் நகையுடன் காதலனுடன் கொழும்புக்குச் சென்றுள்ளார். அங்கு சிறுமியை காதலன் எனச் சொல்லப்படும் இளைஞனும் அவரது 3 நண்பர்களும் வன்புணர்ந்த பின்னர் . சிறுமியை மீண்டும் கிளிநொச்சிக்கு கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை மன்னாரில் 14 வயதுச் சிறுமியை காதலித்த இளைஞன் கிளிநொச்சிக்கு அழைத்துச்சென்றுள்ளார். அங்கு அவரும், அவரது நண்பருமாக இணைந்து அந்தச் சிறுமியை வன்புணர்ந்துள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபரான காதலன் கைது செய்யப்பட்டதும் தவறானமுடிவு எடுத்து உயிர்துறப்பதற்கு முயன்றுள்ளார். (அ-ஓ-5)

## 'பிக்கானால்'...

யாழ். நகருக்கு அண்மையாகவுள்ள அத்தியடிப் பகுதியில் பெண் ஒருவர் 'பிக்கானால்' தாக்கி கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது தலையில் ஏற்படுத்தப்பட்ட கடுமையான அடிகாயமே உயிரிழப்புக்கு காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம் கலாநிதி (வயது-52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நாவற்குழியைச் சேர்ந்த இவர் 3 ஆண்டுகளுக்கு முன்பே அத்தியடிக்கு வந்து குடியமர்ந்துள்ளார். இவர் கணவனைப் பிரிந்து 24 வயது மகளுடன் தனியாகவே அங்கு வசித்து வந்துள்ளார். அயலவர்கள் மற்றும் உறவினர்களுடன் இவர்களுக்கு தொடர்பாடல் மிகக் குறைவாக இருந்து வந்துள்ளது என பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவதினமான நேற்றுமுன்தினம், பி.ப. 3.30 மணியளவில் தாயின் அலறல் சத்தம் கேட்டதாக மகள் பொலிஸ் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'வழமையாக வீட்டுக்கு வேலைக்கு வருபவர் நிற்கும்போது என்னை வெளியில் வரக்கூடாது என்று அம்மா சொல்லியுள்ளார். அதனால் நான் வீட்டினுள்ளேயே இருந்தேன். பி.ப. 3.30 மணியளவில் அம்மா பெரிதாக அலறும் சத்தம் கேட்டது. இரவு 6 மணியளவில் வேலை செய்ய வந்தவர் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது. மாலை 6.30 மணியாகியும் அம்மா வீட்டினுள் வரவில்லை என்பதால் அலைபேசி அழைப்பு எடுத்தேன். வீட்டின் முன் பக்கம் அலைபேசிச் சத்தம் கேட்டது. பின்கதவு வழியாக சென்று பார்த்தபோது அம்மா தலையில் குருதி வடிந்த நிலையில் வீழ்ந்து கிடந்ததாக மகள் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

வீட்டினுள் செய்வினை சூனியங்கள் செய்வதற்குப்பயன்படுத்தப்படும்பொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் 40 லட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கொலை செய்த சந்தேக நபர் கொலையுண்டவருக்கு அருகில் யாராவது சென்றால் மின்சாரம் தாக்குவதற்கு ஏற்றவகையில் இரும்புக் கம்பியை மின்இணைப்புடன் தொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்.

தச்சன்தோப்பிலுள்ள சந்தேகநபரின் வீட்டுக்கு பொலிஸார் சென்றபோது அவரது மோட்டார் சைக்கிள் மாத்திரமே மீட்கப்பட்டது. சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். (அ-ஓ-5-26)

## வாக்குச்சீட்டு...

வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படாமையே இதற்குக் காரணம் எனத் தெரியவருகின்றது.

தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதற்குரிய வாக்குச்சீட்டுக்களை அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் இன்று முதல் ஒவ்வொரு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களும் பெற்றுச் செல்வதற்கும் நாளை 15 ஆம் திகதி முதல் தபால்மூல வாக்களிப்புக்குரிய ஒழுங்குகளை முன்னெடுக்கும் வகையிலும் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் நேற்றிரவு திடீரென அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு இன்று அவசரமாகக் கூடி, தேர்தலுக்கு ஏற்பட்டுள்ள இடையூறு தொடர்பில் கலந்துரையாடவுள்ளது. கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுக்கு அமைவாகவே தேர்தல் தொடர்பான எஞ்சிய பணிகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (அ-ஓ-5)


21ஆம் ஆண்டு நினைவலைகள்



உதிப்பு 20 . 12 . 1935

உதிர்வு 07 . 03 . 2002

சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி:நவமி (14.02.2023)

புன்னகை பூத்த மலரொன்று
பூமியில் புதைக்கப்பட்ட நாள்
கள்ளமற்ற வளர்மழலை ஒன்று
காணாமல் போன நாள்
அமைதியான ஏவுகணை ஒன்று
அனைவரையும் அழவைத்த நாள்
அக்கினி சிறகொன்று பறந்து
ஆகாயத்தில் மறைந்ததுவோ
எம் உயர்வே கனவென்ற இமயம்
இதயம் விம்ம சரிந்தநாள்
இருபத்தொரு வருடங்கள் சென்றாலும்
எம் இதயத்தில் இருப்பீர்கள் அப்பா

சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டில்லியின்...

தஞ்சாவூரில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் பழ.நெடுமாறன், காசி ஆனந்தன் ஆகியோர் செய்தியாளர் சந்திப்பை நேற்று நடத்தினர். இந்தச் செய்தியாளர் சந்திப்பில், பிரபாகரனும் அவரது குடும்பத்தினரும் நலமுடன் இருப்பதாக நெடுமாறன் தெரிவித்தார்.

'விடுதலைப் புலிகள் வலிமையாக இருந்த காலம்வரை இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதையும் தங்கள் மண்ணில் காலூன்ற பிரபாகரன் அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதனுடனும் எந்தக் காலகட்டத்திலும் எத்தகைய உதவியையும் பெறுவதில்லை என்பதிலும் பிரபாகரன் மிக உறுதியாக இருந்தார். தற்போது இலங்கையில் ஆழமாகக் காலூன்றி, இந்திய எதிர்ப்புத் தளமாக அதை ஆக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதையும் இந்துமா கடலின் ஆதிக்கம் சீனாவின் பிடியில் சிக்கும் அபாயம் இருப்பதையும் எண்ணிப் பார்த்து அதைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென இந்திய அரசை வேண்டுகிறோம்' எனவும் நெடுமாறன் தெரிவித்ததைச் சுட்டிக்காட்டி இந்திய அரசின் நிகழ்ச்சி நிரலையே அவர் முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

இந்திய, இலங்கை மூத்த ஊடகவியலாளர்கள், தமிழ்த் தேசியப்பற்றாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள் எனப் பலரும் நெடுமாறனின் கருத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்திய அரசு, இலங்கை அரசுக்குத் தெளிவான செய்தியை முன்வைப்பதற்காகவே இவ்வாறானதொரு நாடகத்தை முன்னெடுத்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (அ-ஒ-5)

## சீமான்...

பிரபாகரன் தன் மக்களை விட்டு எங்கும் சென்றிருக்கமாட்டார். தன் உயிரைத் தற்காத்துக் கொண்டு ஓடுபவர் பிரபாகரன் அல்ல. அவர் வருவதாக இருந்திருந்தால் சொல்லிவிட்டு வரமாட்டார். மக்களிடம் வந்த பிறகுதான் சொல்லி இருப்பார். பிரபாகரன் இருந்திருந்தால் 15 ஆண்டுகள் பேசாமல் இருந்திருக்கமாட்டார் - என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார். (அ-ஒ-இ)

## மஹிந்த...

இந்தியாவில் உள்ளவர்கள் தங்கள் சுயலாப அரசியலுக்காகப் பிரபாகரனின் பெயரைப் பயன்படுத்தி வதந்தி பரப்புகின்றனர். இது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்று இறுதிப்போரின்போது பாதுகாப்பு அமைச்சராகவும் ஜனாதிபதியாகவும் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'வன்னியில் இராணுவத்தினருடனான மோதலில் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட நாளன்று இறுதிப் போரும் நிறைவுக்கு வந்தது. போர் வெற்றியும் அன்று எம்மால் அறிவிக்கப்பட்டது. உயிரிழந்த பிரபாகரனின் சடலத்தை எமது இராணுவத்தினர் கைப்பற்றி நல்லடக்கம் செய்தனர். இது யாவரும் அறிந்த உண்மை' - என்றார். (அ-ஒ-5-22)

## சரத் வீரசேகர...

பிரபாகரன் பல லட்சக்கணக்கான உயிர்களை கொலை செய்துள்ளமையால், அவர் தற்போது நரகத்திலேயே இருப்பார் எனவும், பழ.நெடுமாறன் நரகத்துக்குச் சென்றே அவரை அழைத்து வரவேண்டும் எனவும் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

'பிரபாகரன் தற்போது நரகத்தில் உள்ளார். நரகத்திலிருந்து வருகைத் தருவதற்கு பல பிறவிகள் காத்திருக்கவேண்டும். பல லட்சம் மக்களைக் கொலை செய்துள்ளமையால், அவர் தற்போது நரகத்திலேயே இருக்கவேண்டும். அப்படியென்றால், இவரும் நரகத்துக்குச் சென்றே அவரை மீண்டும் அழைத்து வரவேண்டும்' - என்றார். (அ-ஒ-இ)

## எம்.கே. சிவாஜிலிங்கம்...

பழ.நெடுமாறன் 45 ஆண்டுகளாக தலைவர் பிரபாகரனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர். பல செயற்பாடுகளில் ஒன்றாகப் பயணித்தவர். அவர் ஒரு விடயத்தைக் குறிப்பிடுவதைச் சாதாரணமாகவும் எடுக்கமுடியாது. நாம் இந்த விடயத்தில் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் - என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று பழ.நெடுமாறன் கூறியுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் ஊடாக அறிந்தேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உயிரிழந்துவிட்டார் என்று இலங்கை இராணுவம் 2009ஆம் ஆண்டு மே 19ஆம் திகதி அறிவித்து உடலைக் காட்டியபோது, மே 20ஆம் திகதி சென்னையில் நடந்த பேரணி ஒன்றில் கலந்துகொண்ட நான், அது விடுதலைப் புலிகளின் தலைவரின் உடல் அல்ல என்று உறுதியாகக் கூறியிருந்தேன்.

முடிந்தால் டி.என்.ஏ. பரிசோதனையின் மூலம் நிரூபியுங்கள் என்று இலங்கை அரசாங்கத்துக்கு சவால் விடுத்திருந்தேன். இதைப் பல தடவைகள் மீண்டும் மீண்டும் நான் கூறியிருந்தேன். டி.என்.ஏ. பரிசோதனையை நடத்துங்கள், அல்லது மரணச் சான்றிதழை வழங்குங்கள் என்று கூறியிருந்தேன். இலங்கை அரசாங்கம் இன்றுவரை அதைச் செய்யவில்லை.

இந்தியாவில் ஒரு வழக்குக்காக வே.பிரபாகரன் தேடப்படும் நிலையில், அதற்கான மரணச்சான்றிதழ் ஒன்றைக்கூட இலங்கை அரசாங்கத்தால் வழங்க முடியவில்லை என்றால் அதன் பின்னணி என்ன?

உடலை எரித்து விட்டு சாம்பலைக் கடலில் கரைத்துவிட்டோம் என்று அரசாங்கத்தின் ஒரு தரப்பு கூறியிருந்தபோது, இன்னொரு தரப்பு உடலைப் புதைத்துவிட்டோம் என்று கூறியிருந்தது.

பழ.நெடுமாறன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் உயிரோடு இருக்கின்றார் என்று கூறியிருக்கின்றார். பழ.நெடுமாறனுக்குத் தெரிந்த அனைத்து விடயங்களும் எனக்குத் தெரியும் என்று கூறமுடியாது. அதனால் அவர் கூறியதை இல்லை என்று மறுக்கமுடியாது- என்றார். (அ-ஒ-26)

## கோத்தா...

உயிரிழந்தவர் மீண்டும் உயிருடன் வர அவர் என்ன கடவுளா? புலிப் பயங்கரவாத அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கு 2009 இல் எமது படையினர் முடிவுகட்டிவிட்டார்கள். போர்க்களத்தில் இருந்து அவரின் சடலத்தை மீட்டு எரித்தோம். அதன்பின்னர் அவர் எப்படி உயிருடன் இருப்பார்? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் போரின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலராகப் பணியாற்றியவரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக்ச.

'பிரபாகரன் மட்டுமல்ல அவரின் மனைவி, மகள், மூத்த மகன், இளைய மகன் ஆகியோரும் இறுதிப் போரில் உயிரிழந்துவிட்டார்கள். மனநோய் பிடித்தவர்கள் பிரபாகரனின் பெயரைப் பயன்படுத்தி அரசியல் செய்ய முனைகின்ற அதே வேளை, அவர்களில் சிலர் பிரபாகரனை உயிர்ப்பிக்கவும் முயற்சிக்கின்றனர். இந்த மனநோயாளர்களின் கருத்துக்குப் பதிலளிப்பது எமக்குத்தான் வெட்கக்கேடு' - என்றார். (அ-ஒ-5,22)

## இராணுவப் பேச்சாளர்...

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இல்லை என்றும், அவர் இறுதிப் போரில் கொல்லப்பட்டார் என்றும் இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

பிரபாகரன் நலமுடன் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத்திடம் பி.பி.சி. கேள்வியெழுப்பியது.

'தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டுவிட்டதற்கான ஆதாரங்கள் எம் வசம் உள்ளன.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நடந்த இறுதிக்கட்டப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டார். டி.என்.ஏ. ஆதாரங்களையும் நாம் எடுத்துள்ளோம். குறித்த திகதியில் பிரபாகரன் கொல்லப்பட்டமைக்கான டி.என்.ஏ. பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் எடுத்துள்ளோம். தவறான தகவல்களை அவர்கள் வெளியிடுகின்றார்கள். இந்தக் கூற்று எங்களுக்கு எந்தவித எச்சரிக்கை உணர்வையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் எங்களுக்குப் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்பது தெளிவாகத் தெரியும், அதில் சந்தேகமே இல்லை' - என பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்தார். (அ-ஒ-22)

## வை.கோ....

பிரபாகரன் உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வை.கோ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள வை.கோ., தலைவர் பிரபாகரனோடு களத்தில் நின்ற போராளிகள் சிலர் இன்னமும் உலகின் பல நாடுகளில் இருக்கின்றனர். என்னோடு தொடர்பில் இருக்கும் அத்தகைய போராளிகள் அண்ணன் பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள செய்தியை உறுதிப்படுத்தவில்லை. ஆனாலும் அவர் கூறியபடி தேசியத் தலைவர் பிரபாகரன் நலமுடன் இருந்தால் அதை விட உலகத் தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது வேறு ஒன்றும் இருக்கமுடியாது - என்றார். (அ-ஒ-இ)

## பா.அமைச்சின் செயலர்...

இறுதிப்போரில் பிரபாகரனுடன் அவரின் மனைவி, மூன்று பிள்ளைகளும் உயிரிழந்துவிட்டனர். பிரபாகரன் குடும்பத்தில் எவரும் இன்று உயிருடன் இல்லை - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமால் குணரட்ண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதிப்போரில் கொல்லப்பட்டுவிட்டார். இந்தத் தகவலை 2009ஆம் ஆண்டுமே மாதம் 18ஆம் திகதி இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக சர்வதேசத்துக்கு அறிவித்துவிட்டது. இந்நிலையில் பிரபாகரனும் அவரின் மனைவியும் மகளும் உயிருடன் இருக்கின்றார்கள் என்று பொய்யான தகவலை தமிழகத்தில் உள்ள புலிகள் சார்பு அமைப்பைச் சார்ந்த முக்கியஸ்தர் ஒருவர் வெளியிட்டுள்ளார். பொய்யான தகவலை வெளியிட்டவருக்கு எதிராக இந்திய மத்திய அரசு கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பொய்யான தகவல் தொடர்பில் இலங்கையில் எவரும் குழம்பத் தேவையில்லை - என்றார். (அ-ஒ-5-22)

## பொன்சேகா...

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு சிறந்த தலைவர். அந்தத் தலைவர் இறுதிப்போரில் எமது இராணுவத்தினருடனான மோதலில் கொல்லப்பட்டுவிட்டார். அவரின் மனைவி மதிவதனி, மகன்களான சார்ள்ஸ் அன்ரனி, பாலச்சந்திரன் மற்றும் மகள் துவாரகா ஆகியோரும் இறுதிப் போரில் உயிரிழந்துவிட்டார்கள். பிரபாகரன் குடும்பத்தில் எவரும் தப்பவில்லை. போராட்டத்தில் தனது குடும்பத்தையே அர்ப்பணித்தவராக பிரபாகரன் திகழ்கின்றார் என்று போரை வழிநடத்திய இராணுவத் தளபதியான சரத்பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் சிலருக்கும், இந்தியாவிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் சிலருக்கும் பிரபாகரனின் பெயரை அடிக்கடி உச்சரிக்காவிட்டால் அரசியல் பிழைப்பு நடத்தமுடியாது. அவர்களில் ஒருவர்தான் பழ.நெடுமாறன். அவர் இறுதிப்போர் நிறைவடைந்த காலம் தொட்டு இன்று வரைக்கும் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்ற பொய்யான தகவலை வெளியிட்டு வருகின்றார். தற்போது அவர், பிரபாகரன் மட்டுமன்றி அவரின் மனைவியும், மகளும் உயிருடன் உள்ளார்கள் என்றும், மூவரும் நலமாக உள்ளார்கள் என்றும் மேலும் பொய்யான தகவலை வெளியிட்டு தமிழ் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் - என்றார். (அ-ஒ-5-22)

## பழ.நெடுமாறன்...

நேரத்தில் வெளிப்படுவார்கள் எனவும் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் பழ. நெடுமாறன், காசி ஆனந்தன் ஆகியோர் செய்தியாளர் சந்திப்பை நேற்று நடத்தினர். அறிக்கை ஒன்றை அவர் முதலில் வாசித்தார்.

'தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் பற்றிய ஓர் அறிவிப்பை ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில், பல்வேறு தலைவர்கள் முன்னிலையில் அறிவிப்பதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். சர்வேதச சூழலும் இலங்கையில் ராஜபக்ச ஆட்சியை வீழ்த்தும் அளவுக்கு வெடித்துக் கிளம்பியுள்ள சிங்கள மக்களின் போராட்டங்களும் தமிழீழத் தேசியத் தலைவர் வெளிப்படுவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.

இந்தச் சூழலில் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் மிக்க நலமுடன் இருக்கிறார் என்ற நற்செய்தியை உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு உறுதியாகத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இதுவரை அவரைப் பற்றித் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட ஊகங்களுக்கும் ஐயங்களுக்கும் இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புகிறோம். தமிழீழ மக்களின் விடியலுக்கான திட்டத்தை அவர் விரைவில் அறிவிக்கவுள்ளார். தமிழீழ மக்களும் உலகத் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்று அவருக்கு முழுமையான ஆதரவை அளிக்க முன்வருமாறு வேண்டுகிறோம்.

விடுதலைப் புலிகள் வலிமையாக இருந்த காலம்வரை இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதையும் தங்கள் மண்ணில் காலூன்ற அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதனுடனும் எந்தக் காலகட்டத்திலும் எத்தகைய உதவியையும் பெறுவதில்லை என்பதிலும் பிரபாகரன் மிக உறுதியாக இருந்தார்.

12 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழ. நெடுமாறன்...**

*(11ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தற்போது இலங்கையில் ஆழமாகக் காலூன்றி, இந்திய எதிர்ப்புத் தளமாக அதை ஆக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதையும் இந்துமாக்கடலின் ஆதிக்கம் சீனாவின் பிடியில் சிக்கும் அபாயம் இருப்பதையும் எண்ணிப் பார்த்து அதைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென இந்திய அரசை வேண்டுகிறோம்.

இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழக அரசும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமிழக மக்களும் ஒன்றுபட்டு நின்று தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குத் துணை நிற்குமாறு வேண்டிக்கொள்கிறோம், என அந்த அறிக்கையை நெடுமாறான் வாசித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த நெடுமாறன், பிரபாகரன் குடும்பத்தினருடன் எனக்குத் தொடர்பிருக்கிறது. அந்தத் தொடர்பின் மூலம் அறிந்த செய்திகளை, அவர்களுடைய அனுமதியுடன் இங்கே வெளியிடுகிறேன். அவர் எங்கே இருக்கிறார், எப்போது வருவார் என்பது குறித்து எல்லோரும் ஆர்வமாக இருக்கிறார்கள். ஆனால், அவர் விரைவில் வெளிப்படுவார். மனைவி, மகள் நலமுடன் இருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

இவ்வளவு நாள் கழித்து இதை அறிவிக்க என்ன காரணம் என செய்தியாளர்கள் கேட்டபோது, சர்வதேச சூழல் தற்போது கனிந்திருக்கிறது. எந்த சிங்கள மக்கள் ஆட்சி அவரை (மஹிந்த ராஜபக்ச) பீடத்தில் உட்கார வைத்தார்களோ, அதே சிங்கள மக்கள் அவருக்கு எதிராக கொதித்தெழுந்து போராடி அவருடைய ஆட்சியை வீழ்த்தியிருக்கிறார்கள். சிங்கள மக்களுக்கு இப்போதுதான் உண்மை புரியத் தொடங்கியிருக்கிறது. இதைவிட நல்ல சூழல் என்ன இருக்கமுடியும்? - என்றார்.

(அ-ஓ-இ)


## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. (வசிப்பதற்கும், நிறுவனங்களுக்கும், களஞ்சியப் படுத்தலுக்கும் உகந்தது) நிறுவனங்களுக்கு உகந்தது.

T.P.: 077 602 4591

## இலவச ஆங்கில, IT வகுப்பு

4 மணித்தியாலம் இலகுவழி கற்பித்தல் முறை

16.02.2023 வியாழன் 9am to 1pm

முற்பதிவினை மேற்கொண்டு பங்குபற்றவும்

ELAS Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna. (பல்கலை எதிரில்)

075 200 2701

## மணப்பெண் தேவை

**இந்து, கௌரவகுலம் (V), Australia Citizen**
**பின்வரும் மாப்பிள்ளைகளுக்குப் பெண் தேவை**

01. மானிப்பாய் - நாவற்குழி, 1990, பூரட்டாதி, CPA, ACMA, CGMA, Masters of Commers, CIMA, Business Administration Manager.
02. உசன் - கரவெட்டி, 1990, சதயம், Phd, Data Scientiest
03. ஆனைப்பந்தி - மானிப்பாய், 1992, பூராடம், MBA, MEng (Civil), Civil Engineer
04. கொக்குவில் - கந்தர்மடம், 1992, புனர்பூசம், Bachelor of Computer System Engineer.
05. புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம், 1992, விசாகம், BSc Civil Engineering, CIMA, Fully Qualified, Accountant.
06. நயினாதீவு, 1992, அனுசம், Master of Engineering, Civil Engineer.
07. சாவகச்சேரி - Jaffna Town, 1988, பூரட்டாதி, BEng, Civil Engineer
08. Jaffna Town, 1988, அனுசம், B.Com Degree, Accountant.
09. மானிப்பாய் - கொக்குவில், 1984, சுவாதி, CIMA, IT Engineering, MBA, Business Analyst.
10. யாழ்ப்பாணம், 1984, ரேவதி, Bachelor Of Information Technology.
11. பருத்தித்துறை - யாழ்ப்பாணம், 1993, அனுசம், BSc Engineering, Civil Engineer.
12. மல்லாகம், 1985, பூரட்டாதி, Bachelor Of Software Engineering (Australia) Software Engineer.
13. ஏழாலை - இணுவில், 1986, அச்சுவினி, IT Degree (Australia)
14. அரியாலை, 1982, ரேவதி, BEng (Hons), Engineer
15. மாவிட்டபுரம் - இணுவில், 1985, சதயம், Civil Engineering, Charted Accountant.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728


## மரண அறிவித்தல்

### பிரான்சிஸ் சேவியர் (மனோகரன்) செலின் ஞானேஸ்வரி

பிறப்பு 02.08.1954 இறப்பு 12.02.2023



மல்லாகம் தேவாலய வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் (மனோகரன்) செலின் ஞானேஸ்வரி நேற்றுமுன் தினம் (12.02.2023) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (14.02.2023) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு குளமங்கால் சேமக்கலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.23488)(2.6)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் மகேந்திரராஜா (படையப்பா)

**[சிவன் ரவல்ஸ் உரிமையாளர்]**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேந்திரராஜா (படையப்பா) கடந்த (11.02.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனும், சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளின் மருமகனும், மனோகரன் (பிரான்ஸ்), ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சர்வலோகநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தபேசன் மற்றும் சலூஜா, வனோஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லக்ஸனின் பாசமிகு மாமனாரும், சிவலோகநாயகி, சிவலோகநாதன், லோகேஸ்வரநாதன், விக்கினேஸ்வரநாதன், சாந்தநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்ணில் 09.12.1960 விண்ணில் 11.02.2023

தகவல்:
குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறு[illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org